கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் வருகிற 25/01/2025 அன்று கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் வீர வணக்கநாள் பொதுக்கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடுகள் செய்வது குறித்து ஆலோசிக்க நேற்று நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு தெற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர், பேரூர் செயலாளர் மு.தேவராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கையில் நேற்று (22.01.2025) நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக, சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலையினை திறந்து வைத்ததை முன்னிட்டு, நகரம்பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலைக்கு. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். உடன் வழக்கறிஞர் சிவ.கலைமணி அம்பலம், வாரிசுதாரர்கள் கே.செல்வராஜ், கண்ணதாசன் உட்பட பலர் உள்ளனர்.

பம்மல் வே.கருணாநிதி தலைமை! திருநீர்மலை த.ஜெயகுமார் வரவேற்புரை!

பம்மல் வடக்கு - தெற்குப் பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜன.23 - தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு - தெற்குப் பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் இன்று (23 - 1 - 2025 - வியாழக்கிழமை) காலை 10 மணியளவில் பம்மல் எஸ்.எஸ்.மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் பம்மல் வே.கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் வரவேற்புரை யாற்றுகிறார்.

கே.சந்திரன், எஸ்.கே. நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், க.சுந்தர மூர்த்தி, இரா.பாபுஜி, மு.நித்தியானந்தம், ப.காளேஸ்வரன், ஆர்.உமாசங்கர், பா.டில்லி துரை, இளங்கோவன், என். பன்னீர்செல்வம், பா.கவிதா, பி.ஜெ.வேந்தன், என்.கே. ரவிச்சந்திரன், இரா.கந்த வேலு, ஆர்.கோகுல், சு. மனோகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மேயர் க.வசந்தகுமாரி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., துணை மேயர் கோ.காமராஜ் இரா.நரேஷ்கண்ணா எம்.சி., கோல்டு டி.பிரகாஷ், பேராசிரியர் எல்.பிரபு, வி. ரவிச்சந்திரன், பி.கே.ஏ. சத்தியபிரபு, ப.அன்பழகன், க. மோகன், மு.நி.தமிழ்குமரன், ஏ.அனிஸ்டன், வி.எஸ். ஜெகன்நாதன், மு.இன்பசேகர், என்.காந்தி, எச்.முகம்மது அப்பாஸ், எம்.சாலா (எ) சுகுமாறன், பி.ஸ்ரீதர், பி. ஆண்டவன், ஏ.பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீவிஜயகுமார், சித்ரா தமிழ் குமரன், கல்யாணிடில்லி,

ரம்யாசத்தியபிரபு, எ.மதினாபேகம், சத்யாமதியழகன், சண்முகசுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், வட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.-2), கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இக்கூட்டத்தில் 25.1.2025 அன்று பல்லாவரத்தில் கழகத் தலைவர் - முதல்வர் பங்கேற்கும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம், 2026 சட்டமன்றத் தேர்தல் பணி, கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

ஏ.செந்தில்குமார், எஸ். வெங்கடேசன், எம்.சுரேஷ் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

ரூ.46.80 கோடி மதிப்பீட்டில்

திருப்பூர் மாநகராட்சிக்குப் புதிய அலுவலகக் கட்டிடம்!

தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது!

சென்னை, ஜன.23- திருப்பூர் நகராட்சியானது 01.01.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, பின்னர் 2 மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் 8 கிராம ஊராட்சிகளை இணைத்து 25.10.2011 முதல் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 159.35 ச.கி.மீட்டராகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8.77 இலட்சம் ஆகும். தற்போதைய மக்கள் தொகை 13.99 இலட்சமாகும். முதல் நிலை (A Grade) மாநகராட்சியாக உள்ள திருப்பூர் மாநகராட்சியானது 60 வார்டுகளை கொண்டுள்ளது.

தற்போது திருப்பூர் மாநகராட்சியுடன் இம்மாநகரையொட்டி அமைந்துள்ள கனியாம்பூண்டி மற்றும் நாச்சிபாளையம் ஆகிய ஊராட்சிகளையும் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, அதிகரித்து வரும் நிர்வாகத் தேவைகளை நிறைவு செய்யவும், பொதுமக்களுக்கான சேவைகளை மேம்படுத்தவும், போதிய வசதிகளுடன் திருப்பூர் மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டுவது அவசியமாக உள்ளது.

எனவே, திருப்பூர் மாநகரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி பேருந்து நிலையம் எதிரில் வார்டு சி, பிளாக் எண். 31, நகரளவு எண். 2ல் உள்ள திருப்பூர் மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 3.32 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தில் இருக்கும் மருத்துவ துறை சார்ந்த பழைய கட்டிடங்களை அகற்றி, அவ்விடத்தில் ரூ.46.80 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சிக்கு புதிய அலுவலகம் கட்டும் பணிக்கு முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில் நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இப்புதிய அலுவலகக் கட்டடம், மொத்தம் 96432 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் அலுவலகப் பகுதி, உயர் அலுவலர்களுக்கான காத்திருப்பு அறை, கழிப்பறை, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்தூக்கிகள், சாய்வு தளங்கள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக அமையவுள்ளது.

பொதுமக்கள், அலுவலர்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் திருப்பூர் மாநகராட்சியின் புதிய அலுவலகக் கட்டிடம் அமையும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

தாம்பரம் கிழக்கு - செம்பாக்கம் தெற்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

மாடம்பாக்கம் ஆ.நடராஜன் எம்.சி - செம்பாக்கம் இரா.சுரேஷ் தலைமை!

தாம்பரம், ஜன. 23 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், தாம்பரம் கிழக்கு பகுதி மற்றும் செம்பாக்கம் தெற்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் இன்று (23.1.2025 - வியாழக்கிழமை) மாலை 3 மணிக்கு, எம்.ஜெ.எல். வெங்கடாஜலபதி பேலஸ், இராஜ கீழ்ப்பாக்கம், செம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

தாம்பரம் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் மாடம்பாக்கம் லயன் ஆ.நடராஜன் மற்றும் செம்பாக்கம் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் இரா. சுரேஷ் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

க.ராமச்சந்திரன், இ.எம்.சாம்சன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

ஏ.ஆர். டி.லோகநாதன், கண். தேவேந்திரன், பொன்.சதாசிவம், வ.விஜயரங்கன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, தாம்பரம் மாநகரச் செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, மாவட்டக் கழக துணைச் செயலாளர், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கே.எஸ். ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி கமலக்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் கோ.காமராஜ், டி.காமராஜ், எஸ்.இந்திரன், திருநீர்மலை த.ஜெயகுமார், ஆதிமாறன், அ. தமிழ்மாறன், எஸ்.சதீஸ், கோல்டு டி.பிரகாஷ், பேராசிரியர் எல்.பிரபு, பி. கே.ஏ.சத்தியபிரபு, ஜெ.சத்தியசீலன் மற்றும் தாம்பரம் கிழக்கு பகுதிக் கழக நிர்வாகிகள் மற்றும் செம்பாக்கம் தெற்கு பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

42 வது வட்டக் கழகச் செயலாளர் சி.மணிவேல், 68 வது வட்டக் கழகச் செயலாளர் எம்.கண்ணன் (எ) சாந்தகுமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	த.பொ. / செ / தெற்கு	129	1
2	மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி-2	207	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/248/ஒப்பந்தப்புள்ளி/2025

பெருநகர சென்னை மாநகராட்சி
பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை

பூ.து.ந.க.எண்.பி2 / 057 / 2025 **இரட்டை உறை முறையில் மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம் - 12, பகுதி - 37, வார்டு - 165ல் உள்ள ஆக்கிரமிப்பில் இருந்த ஆதம்பாக்கம் திருவள்ளுவர் நகர் இணைப்பு சாலையில் அமைந்துள்ள திறந்தவெளி நிலத்தில் (OSR Land) புதிய பூங்கா அமைக்கும் பணி. (Two Cover System)

பணியின் மதிப்பு ரூ.106.48 இலட்சங்கள்
முன்வைப்பு தொகை :- மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **06.02.2025 அன்று மாலை 3.00 மணி வரை**
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **07.02.2025 அன்று மாலை 3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 251 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)**

இந்திய ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர் என்ற வகையில் நாடாளுமன்றநிலைக்குழு தலைவர் தலைமையில் கழக மாநிலங்களவை கழக உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், பஞ்சாப் சண்டிகரில் உள்ள அதிநவீன தோட்டகலை கழிவுகளை மறுசுழற்ச்சி செய்து பதப்படுத்தும் தொழிற்சாலை, கட்டிட கழிவுகளை மறுசுழற்ச்சி செய்யும் தொழிற்சாலை ஒருங்கிணைந்த சண்டிகர் மாநகர கட்டுப்பாட்டு மைய அறை செயல்பாடுகளை பார்வையிட்டனர்.

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

குன்றத்தூர் நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

நகரச் செயலாளர் கே.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன. 23 - குன்றத்தூர் நகரச் செயலாளர் கே.சத்தியமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (23.1.2025) மாலை 4 மணியளவில் அறிஞர் அண்ணா திருமண மண்டபம் குன்றத்தூரில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு நகர அவைத் தலைவர் எம்.சங்கர் தலைமை வகிக்கிறார்.

நகரக் கழக செயலாளர் கோ.சத்தியமூர்த்தி வரவேற்றார்.

டி.கே.குமாரசாமி, டி.எஸ்.கலைச்செல்வன், கே.கே.ராஜமாணிக்கம், ஆ. தமிழ்மாறன், திருநாவுக்கரசு, கே.குணசேகரன், கா.சிதம்பரம், ஜே.மணிமாறன், ஆர். கே.அபிபியூ நிஷா, என்.கந்தசாமி, டி.என்.அருள்மொழி, டாக்டர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், திருபெருமந்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், டி.எம்.உமாசங்கர், டாக்டர் பாபு தீ.வே. நமச்சிவாயம், எம். குப்புசாமி, ஜே.முனுசாமி, டி.வி.சரவணன், கே.எஸ். ராஜி, சையத் யூசுப், என்.தீனதயாளன், எம்.முரளி, மா.அரி, எம்.பக்தவச்சலம், எம்.உமாபதி, ஜே.தயாளன், இ.பலராமன், வஜ்ரவேல், காசிநாதன், நாகேந்திரன், சி.பாபு, டி.ராஜேந்திரன், கே.ரஞ்சித்குமார், கே.தனபால் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் 25.1.2025 அன்று பல்லாவரத்தில் கழகத் தலைவர், முதல்வர் பங்கேற்கும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம், 2026 சட்டமன்ற தேர்தல் பணி, கழக வளர்ச்சிப் பணி குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பகுதிக் கழக செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் பங்கேற்பு!

146 வது வட்டத்தில் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்ட கழக செயலாளர் மதுரவாயல் எம். ரூபன் வேண்டுகோள்!

சென்னை, ஜன. 23 - கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்கவும், சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி,146 வது வட்டத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (23.1.2025-வியாழக்கிழமை) மாலை 5:30 மணி அளவில் கன்னியம்மன் நகர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஆண்டாள் திருமண மண்டபத்தில் வட்டக் கழக அவைத் தலைவர் டி.எஸ். மகாதேவன் தலைமையில் நடைபெறுகிறது.

மொழிப்போர் தியாகிகள் வீர வணக்கநாள் பொதுக்கூட்டம் வருகிற. 25/01/2025 சனிக்கிழமை அன்று சென்னை போரூர் ஜெயின் திடலில் நடைபெற விருக்கிறது. இந்த கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதல்வர் கழக இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார், அது தொடர்பான இக் கூட்டத்தில் மதுரவாயல் வடக்குபகுதி கழக செயலாளர், வளசரவாக்கம் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கவிருக்கிறார்கள்.

ஆகவே 146வது வட்டக் கழகத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்டகழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மகளிர் அணி சகோதரிகள், இளைஞரணி தம்பிமார்கள், (BLA2) பாக முகவர்கள், கழக பொது உறுப்பினர்கள் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் இந்த ஆலோசனை கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழகச் செயலாளர் எம்.ரூபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை வடக்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆர்.எம்.டி.ரவீந்திரன் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது இல்லம் அருகில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஒலி ஒளி.ஆ.பாபு தலைமையில் இரா.செந்தில்குமார், சி.மணிகண்டன், பி.ரவிசங்கர், எம்.லோகநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி,ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, தா.இளையஅருணா எம்.சி ஆகியோர் உணவு வழங்கி மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், என்.மருதுகணேஷ், மு.கோபி, நாகம்மை கருப்பையா, நா.சண்முகம், கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி, வெ.சு.சத்தியநாராயணன்,லயோலா கே.மதன், கார்த்திக் செங்குட்டுவன், பி.செந்தில்குமார் என்.பார்த்திபன், கு.சுந்தர், கு.ரமேஷ் க.கோவிந்தராஜ், பி.கண்ணன் எஸ்.மணிகண்டன், வி.கே.ராஜ், எல்.சீனிவாசன், நெல்லை.எம்.எம். சாமி, மற்றும் பலர் கலந்து கொண்டனர். எல்.கிருஷ்ணஹரிஹரன் நன்றி கூறினார்.